திருவண்ணாமலை, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்– திரு.சி.ஹரகுமார்,எம்.எஸ்ஸி(விவ).,

செமு.ஆ. எண்.அ2/2780/2019 நாள்.07.02.2023.

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி–4–ல் அடங்கியுள்ள – 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்குத் தெரிவுச் செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப் பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கியது – இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை– 1 வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். அ.நி.பி.5/139388/2018, நாள்.01.03.2019.

2 இவ்வலுவலகச் செயல்முறை ஆணைகள் எண்.அ2/2780/2019, நாள்.06.03.2019.

––––

ஆணை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு தற்காலிகமாக ரூ.19500–62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி நியமன ஆணை வழங்கிடப் பார்வை (1)–ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.கி.சங்கீதா, என்கிற தேர்வாளருக்குப் பார்வை (2)–ல் காணும் இவ்வலுவலகச் செயல்முறை ஆணைகளின்படி இளநிலை உதவியாளர் (பிணையம்) – ஆகப் பணி நியமனம் வழங்கப்பட்ட நிலையில், தனியார் போளூர், வட்டாரம் களம்பூர் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில், இளநிலை உதவியாளர் (பிணையம்)–ஆக 13.03.2019 அன்று முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். அன்னார் இளநிலை உதவியாளர் (பிணையம்) பணியில் சேர்ந்துள்ள நாள்.13.03.2019 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இப்பணியாளர் மூன்றாண்டுகள் தொடர்ப் பணிக்காலத்தில், இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்தப்பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படும்.

மேற்காணும், பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி 4–ல் அடங்கிய பணிகளில் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 வரையிலான காலங்களில் வழங்கப்பட்ட பணிநியமனங்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

(ஒம்.)சி.ஹரகுமார்,
வேளாண்மை இணை இயக்குநர்
திருவண்ணாமலை.

பெறுநர்
செல்வி.கி.சங்கீதா,
இளநிலை உதவியாளர் (பிணையம்)
வழி மற்றும் நகல் – வேளாண்மை உதவி இயக்குநர், போளூர், வட்டாரம்.
நகல்– வேளாண்மை இயக்குநர், சென்னை – தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
(அ.நி.பி.5 பிரிவு)
நகல்– அ2 இருக்கை இருப்பு கோப்பிற்கு.

// உத்தரவுப்படி //

கண்காணிப்பாளர்